No. of Printed Pages : 7

**5211**

பதிவு எண் | | | | | | |

September 2015

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் மிகாமல் எழுதுக. **3x4=12**

1. செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை?

2. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தை திரு.வி.க. வழி நின்று ஆய்க.

3. கவிதைக்குரிய நல்லியல்புகளாகக் கம்பர் உரைக்குமாறு யாங்ஙனம்?

4. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை?

5. நம் முன்னோர் நனி நாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் மிகாது விடை எழுதுக. 3x4=12

6. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?

7. விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

8. ''இரந்தும் உயிர் வாழ்தல்...'' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

9. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?

10. தமிழகக் குடை வரைக் கோயில்களைப் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளில் மிகாது விடை எழுதுக. 1x6=6

11. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. வயிற்று பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச் சாரம் கூறுவன யாவை?

IV. பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 2x10=20

13. 'மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

அல்லது

'பால் வண்ணம் பிள்ளை' அல்லது 'வேலி' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'ஒவ்வொரு கல்லாய்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் வரும் கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

நீவிர் விரும்பிய ஒரு சுற்றுலாவிற்குச் செல்ல முடியாமல் தடையேற்பட்டு அதனால் வருத்தம் எய்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்து எழுதுக.

அல்லது

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1x10=10

''மீன்கள்கோ டிக்கோடிசூழ வெண்ணிலாவே! - ஒரு

வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே!

பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே! - நித்தம்

பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே!

ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே! - உனக்கு

அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே!

இரவையும்நண் பகலாக்கும் வெண்ணிலாவே! - உன்னை

இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே!

- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** A little knowledge is dangerous

**17.** Charity begins at home

**18.** Necessity is the mother of invention

**19.** Spare the rod and spoil the child

**20.** As is the king so are the subjects

**21.** Hunger breaks through stone walls

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் **பத்து** வரிகளில் எழுதுக. **1x4=4**

(அ) வாய்மையே வெல்லும்

(ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

(இ) சிறு துளி பெரு வெள்ளம்

**அல்லது**

'தென்றல்' அல்லது 'மத நல்லிணக்கம்' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **5x2=10**

**VI** மற்றும் **VII** -ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காதுகேளாத மாணவர்கள் கீழ்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு மட்டும்** விடையை எழுதுக.

சித்தார்த்தர் என்றழைக்கப்படும் புத்தர், கி.மு. 5ஆம் நூற்றாண்டில் புத்தமதத்தை நிர்மாணித்தார். கி.மு. 3ஆம் நூற்றாண்டு அளவில் அந்த மதம் தமிழகம் வந்தது. தமிழகத்தில் சமணத்தைப்போல் பௌத்தம் பெருமளவு செல்வாக்குப் பெறவில்லை. ஆயினும் தமிழ் இலக்கியத்திற்கும், மொழிக்கும், பண்பாட்டிற்கும், வழிபாட்டு முறைகளுக்கும் பௌத்தம் பெருமளவு நன்கொடை அளித்து இருக்கிறது.

தமிழின் இன்றைய எழுத்து முறைக்குப் பிராகிருதம், பிராமி ஆகிய இரு மொழிகளின் வடிவங்களும் காரணம் என்ற கருத்து உண்டு. இவ்விரு மொழிகளையும் தமிழகத்தில் பரவ விட்டவர்கள் பௌத்தர்களே. தமிழில் பௌத்தர்களின் பாலிமொழிச் சொற்களும் கலந்துள்ளன.

பௌத்தர்கள் தமிழ்மொழியைக் கற்று, அந்த மொழியிலேயே தங்கள் கருத்துக்களை எளிமையாகப் பிரச்சாரம் செய்தனர். சங்க இலக்கியமான நற்றிணையில் உள்ள ஒரு செய்யுளை இயற்றியவர் இளம்போதியார். இவர் பௌத்தத் துறவியாவார். அடுத்தக் காலக்கட்டத்தில் தோன்றியதாகக் கருதப்படும் மணிமேகலையும், பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியும் பௌத்த நூல்களாகும். பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழியம் என்ற இலக்கண நூலைப் புத்தமித்திரனார் என்பவர் இயற்றினார். இதற்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் புத்தமதத்தினர் ஆவார்.

**வினாக்கள் :**

16. எந்தக் காலக்கட்டத்தில் புத்தமதம் தமிழகம் வந்தது?

17. பௌத்தம் போல தமிழகத்தில் பரவியிருந்த மற்றொரு சமயம் எது?

18. இன்றைய தமிழ் எழுத்து முறைக்குக் காரணமான மொழிகள் என்று கூறப்படுபவை யாவை?

19. பௌத்தர்களின் மொழி யாது?

[ திருப்புக

20. இளம்போதியாரின் பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

21. வீரசோழியத்தின் ஆசிரியர் பெயர் யாது?

22. மேற்கண்ட பத்திகளில் காணப்படும் பௌத்த சமய நூல்களைக் குறிப்பிடுக.

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. விழாவில் பல அறிஞர்கள் பேசினர்.
(வாக்கியப் பிழையைத் திருத்தி எழுதுக)

24. பட்ட பகலினிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.
(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. கோளிமுட்டை தாவாரத்தில் உருண்டது.
(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.)

26. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

27. கபிலபரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும், காய்க்கறியும் உண்டனர்.
(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக.)

28. நெல் வயளில் களை பரித்த போது அறவு கடித்தது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

29. எனக்கு பல வீடுகள் உள்ளது.

(தொடரிலுள்ள வாக்கிய பிழையை திருத்துக)

30. பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்

(மரபு வழுஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)

31. வலை-வளை அல்லது உரவு-உறவு (பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.)

32. சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின் உலகில் போர் ஏது பூசல் ஏது புரட்சி ஏது

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக.)

-oOo-